siraku.org
21, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

வாசிப்பு மாதம் 2026

# இளம் எழுத்துகள் 2026

**பாடசாலை மாணவர்களுக்கான வாசிப்பு – படைப்பாக்கப் போட்டி**

**“வாசிப்பிலிருந்து படைப்பிற்கு…”**

**சுற்றறிக்கை இல.:** SA/YE/2026/01 **திகதி:** 30.09.2026

**பெறுநர்:** அதிபர் / பொறுப்பாசிரியர் – அனைத்துப் பாடசாலைகள்

**பொருள்: “இளம் எழுத்துகள் 2026” போட்டியில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்தல்**

மதிப்பிற்குரிய அதிபர் / ஆசிரியர் அவர்களுக்கு,

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே **வாசிப்புப் பழக்கம், கற்பனைத்திறன், படைப்பாக்கச் சிந்தனை, எழுத்தாற்றல் மற்றும் ஆய்வுச் சிந்தனையை** ஊக்குவிக்கும் நோக்கில் சிறகுகள் அமையத்தினால் “இளம் எழுத்துகள் 2026” போட்டி ஏற்பாடு செய்யப்படுகிறது. தரம் 1 முதல் தரம் 13 வரை கல்வி கற்கும் மாணவர்கள் பின்வரும் பிரிவுகளில் பங்குபற்றலாம்.

## 01. போட்டிப் பிரிவுகள்

**பிரிவு 01 | தரம் 1–2 | ஓவியம்**
**கருப்பொருள்:** “எனது புத்தகம் – எனது வாசிப்பு உலகம்”
புத்தகம், வாசிப்பு, நூலகம், பிடித்த கதை / கதாபாத்திரம் அல்லது கற்பனை வாசிப்பு உலகத்தை ஓவியமாக வெளிப்படுத்தலாம். **தாள் அளவு: A4.**

**பிரிவு 02 | தரம் 3–5 | கதை**
மாணவர்களின் கற்பனை, வாசிப்பு மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட கதை. **தலைப்பு: மாணவர் விருப்பம் | 80–100 சொற்கள்.**

**பிரிவு 03 | தரம் 6–7 | நன்னெறிக் கதை**
நேர்மை, நட்பு, கருணை, பொறுப்பு, ஒற்றுமை, மனிதநேயம், இயற்கைப் பாதுகாப்பு அல்லது சமூகப் பொறுப்பு போன்ற கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட கதை. நன்னெறிச் செய்தி / வாழ்க்கைப் பாடம் வெளிப்பட வேண்டும். **150–300 சொற்கள்.**

**பிரிவு 04 | தரம் 8–10 | விஞ்ஞானப் புனைவுக் கதை**
அறிவியல் சிந்தனையையும் கற்பனையையும் இணைத்த கதை. செயற்கை நுண்ணறிவு, ரோபோக்கள், விண்வெளி, எதிர்கால உலகம், கண்டுபிடிப்புகள், காலநிலை மாற்றம், எதிர்கால மருத்துவம், நேரப்பயணம் போன்ற தளங்களைப் பயன்படுத்தலாம். **350–500 சொற்கள்.**

**பிரிவு 05 | தரம் 11–13 | ஆய்வுக் கட்டுரை**
**கருப்பொருள்:** “வாசிப்பு – மாணவர்களையும் சமூகத்தையும் வலுப்படுத்தும் சக்தி”
வாசிப்பு மற்றும் கல்வி, சிந்தனைத்திறன், டிஜிட்டல் வாசிப்பு, பாடசாலை நூலகங்கள், கிராமப்புற வாசிப்பு வாய்ப்புகள், சமூக வாசிப்பு, தலைமைத்துவம் போன்ற விடயங்களை ஆராயலாம். **600–800 சொற்கள்.** ஆதாரங்களை குறிப்பிட வேண்டும்.

## 02. பாடசாலை ஊடான பங்கேற்பு

ஒரு பாடசாலையிலிருந்து பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு **வரையறை இல்லை.** சிறந்த படைப்புகளை மட்டும் தெரிவுசெய்ய வேண்டியதில்லை; ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களையும் பங்குபற்றச் செய்யலாம். ஒவ்வொரு பாடசாலையும் ஒரு **பொறுப்பாசிரியரை** நியமித்து படைப்புகளை சேகரித்து பிரிவு வாரியாக அனுப்பலாம். மாணவர்கள் தனிப்பட்ட முறையிலும் பங்குபற்றலாம்.

## 03. பொதுவான விதிமுறைகள்

- படைப்பு மாணவரின் **சொந்தப் படைப்பாக** இருக்க வேண்டும்.
- இணையம் / பிறரிடமிருந்து பெறப்பட்ட அல்லது ஏற்கனவே வெளியிடப்பட்ட படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- எழுத்துப் படைப்புகள் **தமிழ் மொழியில்** இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாணவரும் தமது பிரிவில் **ஒரு படைப்பை** சமர்ப்பிக்கலாம்.
- குறிப்பிடப்பட்டுள்ள சொல் / அளவு வரம்பைப் பின்பற்ற வேண்டும்.
- படைப்பு மாணவரின் வயது மற்றும் தரநிலைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.
- ஆய்வுக் கட்டுரைகளில் பயன்படுத்திய ஆதாரங்களை குறிப்பிட வேண்டும்.

## 04. படைப்புடன் இணைக்க வேண்டிய விபரங்கள்

மாணவரின் முழுப்பெயர் • தரம் • பாடசாலை • போட்டிப் பிரிவு • படைப்பின் தலைப்பு • பெற்றோர் / பாதுகாவலர் தொடர்பு இலக்கம் • பொறுப்பாசிரியர் பெயர் மற்றும் தொடர்பு இலக்கம்
தனிப்பட்ட முறையில் சமர்ப்பிக்கும் மாணவர்களுக்கு பொறுப்பாசிரியர் விபரங்கள் கட்டாயமல்ல.

## 05. மதிப்பீடு

**ஓவியம்**
கற்பனை • படைப்பாற்றல் • கருப்பொருள் • காட்சிப்படுத்தல்

**கதை**
கதை சொல்லல் • கற்பனை • தனித்துவம் • மொழிநடை

**நன்னெறிக் கதை**
கருத்து • கதை அமைப்பு • கற்பனை • மொழிநடை

**விஞ்ஞானப் புனைவுக் கதை**
அறிவியல் சிந்தனை • கற்பனை • தனித்துவம் • கதை அமைப்பு

**ஆய்வுக் கட்டுரை**
ஆய்வு அணுகுமுறை • ஆதாரப் பயன்பாடு • பகுப்பாய்வு • சமூகச் சிந்தனை

## 06. சான்றிதழ் & நூல் வெளியீடு

தகுதியான படைப்பைச் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் **பங்கேற்புச் சான்றிதழ்** வழங்கப்படும். சிறந்த படைப்புகளுக்கு விசேட அங்கீகாரம் வழங்கப்படும்; பொறுப்பாசிரியர்களின் பங்களிப்பும் பாராட்டப்படும். தெரிவுசெய்யப்படும் சிறந்த மாணவர் படைப்புகள் தொகுக்கப்பட்டு **சிறப்பு நூலாக வெளியிடப்படும்.**

**“உங்கள் படைப்பு ஒரு புத்தகத்தின் பக்கமாக மாறலாம்!”**

## 07. தபால் மூலம் சமர்ப்பித்தல்

**உறையின் மேல் குறிப்பிடவும்:** “இளம் எழுத்துகள் 2026” – போட்டிப் பிரிவு: __________

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**“இளம் எழுத்துகள் 2026”**
சிறகுகள் அமையம்
இல. 21, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

பாடசாலைகள் பல மாணவர்களின் படைப்புகளை பிரிவு வாரியாக ஒழுங்குபடுத்தி ஒரே பொதியில் அனுப்பலாம். ஒவ்வொரு படைப்புடனும் மாணவர் விபரங்கள் இணைக்கப்பட வேண்டும்.

சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி

**31.10.2026**

படைப்புகள் 31 அக்டோபர் 2026க்குள் சிறகுகள் அமையத்தைச் சென்றடைய வேண்டும்.

**தொடர்பு / WhatsApp**
**076 286 0975 | 076 871 2817 | 077 052 3495**
**076 672 9289 | 076 277 0566**
**siraku.org**